# 4

## www.இறுதி நினைவுகள்.com



''உன் தாத்தா எப்போது இறந்தார் என்று உனக்குத் தெரியுமா?'' ல்யூக் விசைப்பலகையை வேகமாகத் தட்டிக்கொண்டிருந்தான். ''மாக்டா தன் திருமணச் சான்றிதழை வக்கீலிடம் காட்ட முடிய வில்லை.''

''ஆமாம். தாத்தாவுக்கு என்ன வேண்டியிருந்தது என்பதைப் பற்றி அவர்கள் பேசிக்கொள்ளவேயில்லை... அவருடைய இறுதிச் சடங்கு விவகாரங்கள். அல்லது யாருக்கு எது போய்ச் சேர வேண்டும் என்று. பாட்டியோ எல்லாவற்றுக்கும் தயாராக இருக்க வேண்டும் என்று நினைப்பவள்.

ல்யூக் கணினித் திரையைச் சுட்டிக்காட்டினான். ''அவள் நிச்சயம் இந்த **இறுதி நினைவுகள்** தளத்துக்குச் சென்றிருக்கிறாள். நான் கணி னியில் இருக்கும் வரலாற்றைப் பார்த்துச் சொல்ல முடியும்.

தன் மரணத்துக்குப் **பின்னான** செய்தியை அதில் விட்டுச் சென்றிருக்கிறாள். ஆனால், அது இவ்வளவு விரைவில் படிக்கப்படும் என்பதை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள்.''

''செய்தி எங்கே?'' நான் **இறுதி நினைவுகள்.com** பக்கத்தை உற்றுப் பார்த்தேன்.

''நான் இப்போதுதான் அந்தத் தளத்துக்குள் நுழைந்து, அந்தச் செய்தியை வரவழைப்பதற்கான கட்டளையைக் கொடுத்திருக்கிறேன்'' என்று, ல்யூக் பரபரப்பாகச் சொன்னான்.

''இந்தத் தளம் மின்னஞ்சல் செய்திகளைச் சேமித்துவைக்கிறது. அவற்றை எழுதியவர் இறந்த பிறகு அவற்றைக் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அனுப்பிவைக்கிறது. எழுதியவர் இறந்த பிறகு செய்திகளை மீண்டும் அனுப்ப 'காக்கும் தேவதை'யாக ஒருவரை நியமிக்க வேண்டும். உன் பாட்டிக்கு அது நான்தான். அப்படி இருக்க நான் ஒப்புக்கொண்டிருந்தேன்.''

''என்ன விசித்திரமான பெயர்! இந்த வாரம் உண்மையான சாவைப் போதுமான அளவு பார்த்தாகிவிட்டது'' ல்யூக்கிடம் இறுதிச் சடங்குச் சுமையைப் பற்றிச் சொல்ல முடியவில்லை; அவன் இணையதள இறப்புகளில் ஆழ்ந்திருந்தான். சில நேரங்களில் சரியான பைத்தியம் போலத் தோன்றினான்; என் ஆண்-தோழனாக அவன் இல்லை என்பது குறித்துச் சில சமயம் நான் சந்தோஷப்பட்டது உண்டு. துக்கம் தொடர்பான இடங்களுக்கான இணைப்புகளைக் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தேன். செல்லப் பிராணிகளைக் குறித்த இறுதி நினைவுகள்கூட இருந்தன! எத்தனை நாய்கள் மின்னஞ்சல்களைப் படித்தன? ல்யூக்குக்கு 'எப்படி' என்ற கேள்விகளே சுவாரஸ்யமாக இருந்தன. எனக்கோ 'ஏன்' என்ற கேள்விகள்தாம்.

''சரிதான். மரணத்துக்குப் பின்-மின்னஞ்சல்கள்'' என் குரல் என்னை அறியாமல் உயர்ந்தது. ''உன் மனதை மாற்றிக்கொண்டால் அல்லது நீ அதை அழித்துவிட்டால் என்னவாகும்? இறுதிச் சடங்குக்குப்

போய்வந்த ஒருவருக்கு இறந்தவரிடமிருந்து மின்னஞ்சல் வந்தால் அதிர்ச்சியடைய மாட்டாரா?''

''ஓ. கே. நீ அதிர்ச்சியடையத்தான் போகிறாய்.'' ல்யூக் எதையோ பதிவிறக்கிக்கொண்டிருந்தான். ''இதை அச்சிடப்போகிறேன்.'' அச்சுப் பொறி இயங்க ஆரம்பித்தது. ''காக்கும் தேவதையான நான் டெலிவரி செய்யும் உன் பாட்டியின் உயிலாக இந்தக் கோப்பு இருக்கலாம்.'' ல்யூக் லேசாக முழங்கையால் இடித்தான்.

''ஆனால் நீ... நீ அதற்குச் சாட்சிக் கையெழுத்துப் போட்டாயா என்ன?''

ல்யூக் 'இல்லை' என்று தலையை அசைத்தான்.

''ஆக, இது சட்டபூர்வமானதுதானா?''

''தெரியாது. இதோ, இந்தத் தகவல் அவளிடமிருந்து வந்ததுதான்.''

அச்சுப்பொறியிலிருந்து பாட்டியின் செய்தி வெளியே வந்துகொண்டிருந்தது... இப்போது.

**''என் அன்புக்குரிய ஜோயி,**

**உன்னிடம் நான் சொல்ல விரும்புவதைச் சொல்ல இது ஒரு அசாதாரணமான வழி, ஆனால், எனக்கு வேறு வழியில்லை... குறிப்பாக, கேட் உரிய நேரத்தில் திரும்பிவர முடியவில்லையென்றால்...**

**நீ உன்னுடைய வீட்டுப்பாடத்திற்காகத் தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்த அதே மாதத்தில்தான் மருத்துவர்கள் என் உடல்நிலையைப் பற்றித் தெரிவித்தார்கள். ஆகவே, உன்னிடம் உண்மையாக நடந்தவற்றைப் பற்றிச் சொல்வதற்குத் தகுந்த நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தேன். வேறு எவருக்கும் இது தெரியாது. என் ரகசியம் என்னுடனேயே இருந்துவிடட்டும் என்று இருந்தது; ஆனால், நிலைமைகள் மாறிவிட்டன. நீ சிலவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.**

இப்போது, ஹங்கேரியில் ஒரு சட்டம் மாற்றப்பட்டிருக்கிறது. சிலர் என்னைத் தேடிக் கண்டுபிடிக்கலாம். ஏற்கனவே செஞ்சிலுவைச் சங்கத்தின் வழியே ஒருவர் என்னுடன் தொடர்பு கொள்ள முயன்றிருக்கிறார்.

தாத்தா போன ஆண்டு இறந்தபோது தன்னுடைய வீட்டையும், எல்லா உடைமைகளையும் ‘என் மனைவி மாக்டாவுக்கு’ என்று எழுதிவைத்திருந்தார். அந்த மாக்டா நான் இல்லை; ஆனால், இங்கே எல்லோரும், உன் அம்மா கேட் உட்பட, நான்தான் அது என்று நினைத்திருந்தார்கள். உன் தாத்தாவும் எனக்குத்தான் எல்லாமும் போய்ச்சேர வேண்டும் என்று விரும்பினார், ஆனால், அதில் சட்டச் சிக்கல் ஒன்று இருந்தது. உன் தாத்தா ஏற்கனவே இன்னொரு மாக்டா கோவாக்ஸைத் திருமணம் செய்துகொண்டிருந்தார். நான் அந்தப் பெயரை எடுத்துக் கொண்டு, அவளுடைய கடந்தகாலத்தையும் வரித்துக்கொண்டேன். 1956முதல் நானும் தாத்தாவும் ஒன்றாக வாழ்ந்தோம். உன் அம்மா கேட் நான் ஹங்கேரியிலிருந்து வந்த ஓராண்டுக்குப் பிறகு பிறந்தாள். ஆனால், உன் தாத்தாவுக்கு அவள் ஒருத்தி மட்டுமே குழந்தை அல்ல.

பல ஆண்டுகளுக்கு முன், பல்கலைக்கழக மாணவியாக இருந்தபோது, இதழாளர் ஒருவருடன் உறவு வைத்திருந்தேன். அப்போது காவல்துறையினர், கம்யூனிஸ்ட் இதழாளர்களுடன் இணைந்து, அதிருப்தியாளர்களை நேர்காண, இளைஞர்களைப் பணியில் அமர்த்திக்கொண்டார்கள். உளவு ஊடகங்கள் என்று அவர்கள் அழைக்கப்பட்டனர். இப்போது ஹங்கேரியில் இந்த மாதிரி பணியாற்றிய தகவலாளர்களைப் பற்றி விசாரணை நடந்துவருகிறது. நான் நேர்கண்ட அறிக்கைகளும் அவற்றில் அடங்கும். என் பெயர் அவர்கள் பட்டியலில் இருக்கிறது. என்னுடைய புகைப்படமும்.

**என்னுடைய உடைமையில் ‘என் மரணத்திற்கு முன் திறக்கக் கூடாது’ என்பதைப் பார். டிபோரின் புகைப்படத்தைப் பார்ப்பாய். அவர் ‘டிபோர்’ என்று மட்டுமே அழைக்கப்பட்டார். அரசியல் செயற்பாட்டாளர், இதழாளர். பல்கலைக்கழகச் செய்தித்தாளுக்கு நான் மாணவர்-ஆசிரியராக இருந்தேன். மிக உற்சாகமான நாட்கள். எங்கள் கருத்துகள் முக்கியமானவை என்று கருதினோம். அவற்றுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தோம். நாங்கள் மக்களை நேர்காணச் சம்மதித்தோம்.**

**பிறகு, கருத்துகளுக்காக ஒருவரை அழிப்பது சரியா என்று எனக்குச் சந்தேகங்கள் வர ஆரம்பித்தன. எங்களுடைய செயல்பாடுகளுக்கான காரணங்களைக் குறித்து நானும் டிபோரும் ஒத்துப்போகவில்லை. அவர் செய்தது எனக்குப் பிடிக்கவில்லை, ஆனால், அறிக்கைகளுடனும் புகைப்படங்களுடனும் நாங்கள் ஏற்கனவே தொடர்புபடுத்தப்பட்டுவிட்டோம். நாம் நினைப்பதற்கு அப்பால் விஷயங்கள் நடந்துவிடுகின்றன. நான் டிபோரின் காதலியாக அறியப்படுவது திடீரென்று அபாயகரமானதாக ஆகிவிட்டது. அவரைக் கைதுசெய்தார்கள். என்னையும் தான். ஆனால், இப்போது வேறு எதுவோ நடந்துவிட்டது.’’**

அச்சுப்பொறி சட்டென்று நின்றது. ‘கோப்பு சேதமடைந்துவிட்டது.’ திரையில் வெறுமை. ‘‘இதை நீ சேமித்துவைத்தாயா?’’ நான் ல்யூக்கைப் பார்த்துக் கத்தினேன். பதில்கள் கிடைக்கும் முன்னரேயே அவற்றை நான் இழந்துவிடப்போகிறேனா?

‘‘இல்லை’’ அவன் இயலாமையுடன் கணினித் திரையைப் பார்த்தான்.

‘‘நல்ல காக்கும் தேவதை!’’ பாட்டி கிட்டத்தட்ட என்னுடையவள் ஆகியிருந்தாள், ஆனால், ல்யூக் எப்படியோ அவளை இணையவெளி

யில் தொலைத்துவிட்டிருந்தான். இணையம் நொறுங்கிய அந்தக் கணத்தில் வாசல் கதவை யாரோ தட்டினார்கள். விசைப்பலகையை வேகமாகத் தட்டிக்கொண்டிருந்த ல்யூக், அதைப் பொருட்படுத்த வில்லை. ஒரு முறை நீண்ட மூச்சை இழுத்துவிட்டு, நான் கதவைத் திறக்கப் போனேன்.

O